# தமிழ்நாடு பட்டதாரி - முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம்
## TAMILNADU GRADUATE - POST GRADUATE TEACHERS' ASSOCIATION

பதிவு எண் : 46/1971, 17/1975 மற்றும் 287/2023
(தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்றது)
அனைத்திந்திய இடைநிலைக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டமைப்புடன் (A.I.S.T.F) இணைந்தது.

மாநில அலுவலகம்

தெய்வத்திரு. **அ. மயில்சாமி** Ex.MLC. நினைவு இல்லம்,
பழைய எண் : 6A/ புதிய எண் 18, பத்மநாபன் வீதி, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராயர் நகர், சென்னை - 600 017

| மாநிலத் தலைவர் | மாநிலப் பொதுச் செயலாளர் | மாநிலப் பொருளாளர் |
|---|---|---|
| **கி. மகேந்திரன்** | **அ. சுந்தரமூர்த்தி** | **ச. துரைராஜ்** |
| அரசு உயர்நிலைப் பள்ளி, | அரசு உயர்நிலைப் பள்ளி, | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, |
| வெண்பாவூர் - 621 116 | முண்டியம்பாக்கம் - 605 601 | திருத்துறைப்பூண்டி, |
| பெரம்பலூர் மாவட்டம் | விழுப்புரம் மாவட்டம் | திருவாரூர் மாவட்டம். |
| அலைபேசி : 99420 04388. | அலைபேசி : 94426 93987. | அலைபேசி : 98436 55355. |
| kmahindran74@gmail.com | sundaramurthytngta@gmail.com | sduraisd@gmail.com |

புரவலர். தெய்வத்திரு. **கோ. அப்பாசாமி**      சிறப்புத்தலைவர். **T. சுப்பிரமணியன்** 94432 91654.


## மாநிலப் பொதுக்குழு கூட்டம்

தமிழ்நாடு பட்டதாரி-முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநிலப் பொதுக்குழு கூட்டம் இன்று(13.08.2023) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் மாநிலத் தலைவர் **திரு.கி.மகேந்திரன்** அவர்கள் தலைமையிலும், மாநில பொதுச் செயலாளர் **திரு.அ.சுந்தரமூர்த்தி** மற்றும் மாநில பொருளாளர் **திரு.ச.துரைராஜ்** ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில சிறப்புத் தலைவர் **திரு.த.சுப்பிரமணியன்** உள்ளிட்ட மாநில நிர்வாகிகளும், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக பின்வரும் தீர்மானங்கள் அனைவராலும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்:**

1. 01.04.2003-க்குப் பிறகு தமிழக அரசின் கீழ் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள தன் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை**(CPS)** ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை **(Old Pension Scheme)** நடைமுறைப் படுத்திட விரைந்து ஆவன செய்திடுமாறு தமிழக அரசை இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

2. அகவிலைப்படி உயர்வை **(D.A)** ஒன்றிய அரசு அறிவிக்கின்ற அதே நாள் முதல் தமிழக அரசும் அறிவித்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

3. கால வரையறையின்றி முடக்கப்பட்டுள்ள சரண் விடுப்பை **(Earned Leave)** உடனடியாக விடுவித்து ஒப்படைப்பு செய்து பணமாக்கிக் கொள்ள ஆணை பிறப்பித்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

4. 2004 முதல் 2006 வரை வெவ்வேறு காலங்களில் தொகுப்பூதிய முறையில் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றிவரும் அனைத்து வகை ஆசிரியர்களையும் அவர்களது நியமன நாள் முதல் **(Date of Joining)** பணி வரன்முறை செய்து ஆணை (Regularization Order) பிறப்பித்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

5. 6 முதல் 10 வகுப்பு வரை கற்றல்-கற்பித்தல் சிறப்புற 2011-12 ஆம் கல்வி ஆண்டில் வழங்கியதைப் போல 6-8 வகுப்புகளுக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 9 மற்றும் 10 வகுப்புகளுக்கு ஒரு பாடத்திற்கு ஓர் பட்டதாரி ஆசிரியர் என்ற அளவில் 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடகளும் ஆக மொத்தம் குறைந்தது **(Minimum)** 8 பட்டதாரி ஆசிரியப் பணியிடங்களை உருவாக்கி ஆணை பிறப்பித்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

6. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலை ஆசிரியர்களுக்கு போதுமான பாட வேளைகள் இல்லையென்பதை காரணமாகக் கொண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை உபரி பணியிடங்களாக மாற்ற கூடாது மேலும் பட்டதாரி ஆசிரியர் பணியிட நிர்ணயத்தில் **(B.T. Post Fixation)** உயர்நிலைப் பள்ளிகளில் உள்ளவாறே, மேல்நிலைப் பள்ளிகளிலும் நிர்ணயம் செய்திட இப்பொதுக்குழு தீர்மானிக்கின்றது.

7. 10.03.2020-க்கு முன்னர் உயர்கல்வி **(Higher Education)** முடித்து ஊக்க ஊதியம் **(Incentive)** பெறாதவர்களுக்கு, ஊக்க ஊதியம் வழங்கிட பெறப்பட்ட கருத்துருக்களைக் **(Proposal)** கொண்டு (அரசாணை:37 நாள்:09.03.2020-ன் படி) விரைந்து ஊக்க ஊதியம் பெற்று வழங்கிட ஆவன செய்திட இப்பொதுக்குழு பள்ளிக்கல்வித் துறையை பெரிதும் வேண்டுகிறது.

8. முறையாக துறை அனுமதி பெற்று 10.03.2020-க்கு பின்னர் உயர்கல்வி **(Higher Education)** முடித்தவர்களுக்கும் பழைய முறையிலேயே (இரண்டு வளரூதியங்கள்) தொடர்ந்து வழங்கிட இப்பொதுக்குழு வேண்டுகிறது.

9. பள்ளிக்கல்வித் துறையில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடம் என்பது நிர்வாகப் பணியிடமாகும். மேற்காண் பணியிடமானது பல ஆண்டு காலம் பணி அனுபவம் கொண்ட மூத்த ஆசிரியர்களை கொண்டு நிரப்பப்பட்டு வருகிறது. தொடர்ந்து அவ்வாறாகவே நிரப்பப்பட வேண்டும் மாறாக ஆசிரியர் தகுதித் தேர்வு **(TET)** முடித்தவர்களைக் கொண்டு நிரப்பிட வேண்டும் என்ற நீதிமன்ற அறிவிப்பை தவிர்த்திட உரிய சட்ட அனுகு முறையோடு நீதிமன்றத்தை அனுகி எப்போதும் போல் பணி அனுபவம் கொண்ட மூத்த ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பிட ஆவன செய்யுமாறு இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

10. 2004-ஆம் ஆண்டிற்கு பிறகு பள்ளிக்கல்வித் துறையில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனங்கள் அறவே இல்லாத நிலை உருவாகியுள்ளது. ஆதலால் 6 முதல் 10 வகுப்புகள் வரை கற்பித்தல் பணிகளை பட்டதாரி ஆசிரியர்களே மேற்கொண்டு வருகின்றனர். பள்ளிப் பார்வை/ஆண்டாய்வுகளின் போது பட்டதாரி ஆசிரியர்களை, ஒத்த பணி நிலையில் உள்ள பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடத்தை அம்மாவட்டத்தில் தகுதியான துறைத்தேர்வு முடித்திட்ட மிக மூத்த பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பிட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

11. அரசாணை நிலை எண்:18, நாள்:18.01.2013-ன் படி பட்டதாரி ஆசிரியர்கள் **M.Ed.**,க்கு பதிலாக **M.Phil.**, முடித்திருந்தால் இரண்டாவது ஊக்க ஊதியம் பெற்றிடலாம். ஆனால் முறையாக துறை அனுமதி பெற்று பல்வேறு பல்கலை கழகங்களில் பகுதி நேரம் / **SSP** வழி படித்த ஆசிரியர்களுக்கு ஒரு சில மண்டல தணிக்கை அலுவலர்கள் மட்டும் தணிக்கை தடை விதித்துள்ளார்கள், எனவே மேற்காண் தணிக்கைகளை தவிர்ப்பது சார்ந்து தெளிவுரை வழங்கிட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

12. அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர் தகுதித் தேர்வு **(TET)** அரசாணை வெளிவரும் முன்பாக நியமனம் செய்யப்பட்ட அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மேற்காண் தகுதித் தேர்விலிருந்து விலக்கு அளித்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

13. கன்னியாகுமரி, திண்டுக்கல் உள்ளிட்ட சில மாவட்டங்களில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணி நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு கடந்த 5 ஆண்டிற்கும் மேலாக நியமன ஒப்புதல் **(Post Approval)** வழங்கப்பட வில்லை. இதனால் அவ்வாறாக நியமனம் பெற்ற ஆசிரியர்களின் வாழ்வாதாராம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே விரைந்து நியமன ஒப்புதல் வழங்கிட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

14. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து பயிற்சிகளும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கிட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

15. பள்ளி வளாகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களது பணி பாதுகாப்பினை உறுதி செய்திட **(Ensure)** இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

16. பள்ளிக்கல்வித் துறையில் 1-8 புள்ளி விவரப்படி **(1-8 Particulars)** உபரி பணியிடங்கள் கணக்கிடப்பட்டு கல்வியாண்டின் இடையில் உபரி பணியிடங்களுக்கான கலந்தாய்வு நடைபெறுவதை தவிர்த்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

17. ஒவ்வொரு பணி தொகுதிக்கும் பதவி உயர்வு **(Promotion)** கலந்தாய்வுகளை நடத்தி முடித்து, அந்நேர்வில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கும் **(Resultant Vacancies)** சேர்த்து அப்பணித் தொகுதிக்கான பொது மாறுதல் கலந்தாய்வினை **(General Transfer Counseling)** ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் நடத்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

18. பொது மாறுதல் கலந்தாய்வினை இணைய வழியில் நடத்திடுவதை வரவேற்கிறோம். அதே வேளையில் தொழிற்நுட்பத்தை இன்னும் கூட வளப்படுத்திடவும் - துரிதப்படுத்திடவும் இப்பொதுக்குழு வேண்டுகிறது.

19. பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு விடைத்தாட்கள் மதிப்பீட்டு பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு மையத்தில் ஒரு முதன்மைத் தேர்வாளருக்கு **(Chief Examiner)** அனுமதிக்கப்பட்டுள்ள உதவி தேர்வாளர்கள் **(Assistant**

**Examiners)** எண்ணிக்கையை 10- லிருந்து 8 ஆக குறைத்து விடைத்தாட்கள் திருத்தும் பணி குறைபாடுகள் ஏதுமின்றி சிறப்பாக நடைபெற உதவிட இப்பொதுக்குழு வேண்டுகிறது.

20. அரசின் அனைத்து பொதுத் தேர்வு **(Public Exams)** மற்றும் திறனறித் தேர்வு **(Talent Tests)** பணிகள் மற்றும் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காண உழைப்பூதியம் **(Remuneration)** மற்றும் மதிப்பூதியங்களை **(Honorarium)** தற்போதைய சூழலுக்கேற்ப மாற்றியமைத்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

21. 1998-ஆம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் **SC/ST** பிரிவின் பின்னூட்ட காலிப் பணியிடத்தில் **(Backlock Vacancies)** பணியமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு, நியமன நாள் முதல் பணி வரன்முறை செய்திட இப்பொதுக்குழு வேண்டுகிறது.

22. **NHIS** திட்டத்தில் அனைத்து வகை அறுவை சிகிச்சைகளுக்கும், அனைத்து மருத்துவ மனைகளிலும் எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வகையில் அனைவருக்கும் ஒரே மாதிரியான காப்பீட்டுத் தொகை வழங்கிடுவதை உறுதி செய்திட ஆவன செய்யுமாறு இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

23. அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர்களுக்கு தூய குடிநீர், ஆரோக்கியமான சிறுநீர் கழிப்பிடம் மற்றும் ஆரோக்கியமான கழிப்பறை வசதிகளை அரசு விரைந்து உறுதிப்படுத்திட இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

24. மாறியும், பெருகியும் வருகிற தொழிற்நுட்ப உலகிற்கேற்ப மாணவர்களுக்கான தேர்வு முறைகளில் மாற்றங்களை மேற்கொள்ள இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

25. பட்டதாரி ஆசிரியர்களுக்கான குறு வள மையப் பயிற்சி **(CRC Training)** உள்ளிட பிற பயிற்சிகளை எண்ணிக்கைகளைக் கருத்தில் கொள்ளாது, மாணவர்களின் திறன் மேம்பாடு சார்ந்த பயிற்சிகளாகவோ அல்லது தகவல் தொழில்நுட்ப முறைகளின் மூலம் கற்பித்தல் சார்ந்த பயிற்சிகளாகவோ வழங்கப்பட்டால் பயனுள்ள வகையில் இருக்கும். மேலும் இப்பயிற்சிகளைப் சிறந்த கருத்தாளர்களைக் கொண்டு (நமது ஆசிரியர்களைத் தவிர்த்து) பணியிடைப் பயிற்சிகளாக, பருவத் தொடக்கத்திலேயே வழங்கப்படுதல் மேலும் சிறப்பிற்குரியதாக இருந்திடும் என இப்பொதுக்குழு வேண்டுகிறது

26. அரசு பள்ளி மாணவர்களது தனித்திறன் **(Individual Skills)** வளர்த்தெடுக்கும் முகமாக நடைபெறும் கலைத் திருவிழாவை ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் நடத்தி முடித்திடுமாறு இப்பொதுக்குழு பெரிதும் வேண்டுகிறது.

| | | |
|---|---|---|
| (ச.துரைராஜ்) | (அ.சுந்தரமூர்த்தி) | (கி.மகேந்திரன்) |